# திருச்சிராப்பள்ளி மாவட்ட சோழிய வேளாளர் சங்கம்

கி.ஆ.பெ.விசுவநாதம் மேல்நிலைப்பள்ளி வளாகம்
தில்லைநகர், திருச்சிராப்பள்ளி - 620 018
**போன்: கணினி மையம்:0431-2764730 / சங்கம் :0431-2760430**


---

**பதிவுக்கட்டணம் - ரூ.100**

**பதிவுக்காலம் - 1 ஆண்டு**

**1 ஆண்டிற்குப்பின் பதிவை புதுப்பிக்க மற்றும் 1 ஆண்டிற்கு- ரூ. 50**

பதிவின் போது கண்டிப்பாக போட்டோ கொடுக்க வேண்டும். போட்டோவை பதிவு செய்த பிறகு திருப்பிக் கொடுத்து விடுவோம். உங்கள் போட்டோவை யாருக்கும் கொடுக்க மாட்டோம். ஈ-மெயிலும் செய்ய மாட்டோம். மற்றவர்கள் கணினி திரையில் மட்டும் பார்த்துக் கொள்ளலாம்.

## பொருத்தப்பட்டியல்

ஒவ்வொரு ஆணிற்கும் அவரது நட்சத்திரத்தைப் பொருத்து பொருந்தும் நட்சத்திரங்கள், பொருந்தாத நட்சத்திரங்கள் என ஒரு பட்டியல் உள்ளது. அதே மாதிரி ஒவ்வொரு பெண்ணிற்கும் அவரது நட்சத்திரத்தைப் பொருத்து பொருந்தும் நட்சத்திரங்கள், பொருந்தாத நட்சத்திரங்கள் என ஒரு பட்டியல் உள்ளது.

பொருந்தாத நட்சத்திரங்கள் பட்டியல் இந்த இணையதளத்தில் உள்ளது. தற்போது பதிவில் சுமார் 3500 பதிவுகள் உள்ளன. அதில் 1900 ஆண்களும், 1600 பெண்களும் ஆவர். இது தவிர மாதந்தோறும் 300க்கும் மேற்பட்ட வரன்கள் பதிவாகின்றன.

உங்களது தேவைக்கேற்ப படிப்பு, வயது, நட்சத்திரம், ராகு கேது பொருத்தம், செவ்வாய் தோசம் (உண்டு/இல்லை) இவற்றை உள்ளக்கிய ஒரு பொருத்தப்பட்டியல் தயார் செய்து கொடுக்கப்படும். இந்த பொருத்தப்பட்டியல் ஒரு மாதிரி இணையதளத்தில் உள்ளது.

பொருத்தப்பட்டியல் கட்டணம் ஒரு பக்கத்திற்கு **ரூ.10/-.** 1 பக்கத்தில் சுமார் 50 வரன்கள் விவரம் இருக்கும். அந்த பொருத்தப் பட்டியலில் இருந்து உங்களுக்கு தேவையான வரன்களின் மற்ற விவரங்களை தெரிந்து கொள்ள சங்கத்தில் உள்ள கோப்புகளில் நீங்கள் பார்த்துக்கொள்ளலாம். இதற்கு கட்டணம் கிடையாது. பிறகு நீங்கள் தேர்ந்தெடுத்த வரன்களின் போட்டோவை பார்க்க 1 போட்டோவிற்கு ரூ.5 செலுத்தி பார்த்துக்கொள்ளலாம்.

நீங்கள் அவர்களது ஜாதகக் கட்டங்கள் அடங்கிய பதிவை (விலாசம், தொலைபேசி எண் உட்பட) பெற்றுக்கொள்ளலாம். 1 ஜாதக நகலுக்கு ரூ.5/-.

வெளியூர் அன்பர்கள் முன்பணம் குறைந்தது ரூ.200 செலுத்தி பதிவு செய்து கொள்ளலாம். பிறகு உங்கள் ஊரில் இருந்து தொலைபேசி மூலம் புதிய பொருத்தப்பட்டியலையோ, ஜாதக நகல்களையோ, உங்கள் ஜாதகத்தை எடுத்துச் சென்றவர்களின் பதிவு எண்ணையோ பெற்றுக்கொள்ளலாம். இதற்கான கட்டணங்களை நீங்கள் செலுத்திய ரூ.200லிருந்து கழித்துக் கொள்வோம். நீங்கள்

எந்த சமயத்திலும் உங்கள் கணக்கில் பாக்கி உள்ள தொகையை திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்.

நேற்றைய வரை பதிவான பதிவுகளை ஆண் பட்டியல் / பெண் பட்டியல் என பட்டியலிட்டுள்ளோம். அந்தப்பட்டியலை ரூ.30/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

இந்த ஆண் / பெண் பட்டியல்கள் இணையதளத்திலும் உள்ளன. அவற்றை நீங்கள் பார்த்துக்கொள்ளலாம்.

சோழிய வேளாளர் மற்றும் இதர வேளாளர்களுக்கும் திருமண தகவல் பதிவு செய்யப்படுகிறது. இதர வேளாளர்களின் பதிவுகள் 10000 லிருந்து தொடங்குகின்றன. சோழிய வேளாளர்களின் பதிவுகள் 30000லிருந்து தொடங்குகின்றன. நீங்கள் இதர வேளாளராயிருந்தால் சோழிய வேளாளாரை அணுகும் போது இதர வேளாளர் என்ற தகவலை அவர்களுக்கு தெரிவியுங்கள். அநேக சோழிய வேளாளர் இதர வேளாளர்களை ஏற்றுக்கொள்கின்றனர்.

உங்கள் ஜாதகங்களை இதுவரை எடுத்துச் சென்றவர்களின் பட்டியல் ரூ.10 கட்டணத்தில் கொடுக்கப்படும்.

ஒரு பையனுக்கும் ஒரு பெண்ணிற்கும், மறுபடியும் பிறந்த தேதி, நேரம், இடம், ஆகியவற்றை வைத்து ஜாதகத்தை மறுபடியும் கணித்து 12 பொருத்தங்கள் பார்த்துத் தரப்படும். இதற்கான கட்டணம் ஒரு ஜோடிக்கு ரூ.20/-.

## சிறப்புப் பதிவு

சிறப்புப் பதிவிற்கான கட்டணம் ரூ.500/- (பதிவுகட்டணம் ரூ.100 தவிர). சிறப்புப் பதிவு செய்தவர்களுக்கு ஈ-மெயில் மூலம் பொருத்தப்பட்டியல், ஜாதகநகல்கள் ஆகியவை அனுப்பி வைக்கப்படும். இது தவிர ஒவ்வொரு மாதமும் ஆகும் பதிவுகளில் இருந்து உங்களுக்கு பொருத்தமான பதிவுகள் பட்டியல் ஒவ்வொரு மாதமும் முதல் தேதி அன்று அனுப்பி வைக்கப்படும்.

## இணைய தள விபரங்கள்

1. பதிவு பாரம் (சோழிய வேளாளர் / இதர வேளாளர்)
2. பொருந்தாத நட்சத்திரங்கள் பட்டியல்
3. பொருத்தப்பட்டியல் மாதிரி
4. நேற்றைய வரை பதிவான ஆண்/பெண் பட்டியல்
5. அடுத்த மங்கல விழா குறித்த விவரங்கள்
6. 12 பொருத்த பட்டியல் - மாதிரி
7. உங்கள் ஜாதகங்களை வாங்கிச் சென்றவர்கள் பட்டியல் - மாதிரி